[2008 மே 7

217—

தரம் உயர்த்துதல்

***19509—திரு. கே.வீ. ராமநாதன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானி தொகுதி, ஓரிச்சேரி கிராம ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பவானி தொகுதி, ஓரிச்சேரி கிராம ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவது குறித்த கருத்துரு தற்போது ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வீ. ராமநாதன்.

திரு. கே.வீ. ராமநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்குட்பட்ட ஓரிச்சேரி அரசு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தரவேண்டுமென மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள்வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுதான் அவருடைய மூலக்கேள்வியும்கூட. நிலைமை என்னவென்று சொன்னால், அது குறித்த உரிய கருத்துருக்கள் அரசுக்கு இன்னும் வரவில்லை. அதற்குரிய பங்குத் தொகைகூட இன்னும் செலுத்தப்படவில்லையென்று நான் அறிகிறேன். அதற்கு அருகிலேயே இரண்டு பள்ளிகள்—புதுப்பாளையத்திலேகூட ஒரு பள்ளி மூன்று கிலோ மீட்டர் தூரத்திலேயே இருக்கிறது. எனவே, அங்கே

2008 மே 7]

இருக்கக்கூடிய மாணவர்கள், பக்கத்திலே மூன்று கிலோ மீட்டருக்குள்ளாக இருக்கக்கூடிய பள்ளிக்குச் செல்லக்கூடிய நிலைமை இருக்கிறது. வரக்கூடிய காலங்களில்—அரசினுடைய நிதிநிலைமைக்கு ஏற்ப, பிற்காலங்களில் அதுபற்றி நாம் யோசிக்க முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 218, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

218—

மரக் கன்று நடுதல்

***29370—திரு. எஸ்.ஆர். இராஜா:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட கடலோரப் பகுதிகளில் வனத் துறைமூலம் மரக் கன்றுகளை நட்டுப் பராமரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, சுனாமியால் பாதிக்கப்பட்ட கடலோரப் பகுதிகளில் மரக் கன்றுகள் ஏதும் நடப்படவில்லை. தாம்பரம் தொகுதியில் உத்தண்டி முதல் ஒட்டியம்பாக்கம் வரையிலான பகுதியில் மரக் கன்றுகளை நடவு செய்ய இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இப்பணிகள் 2008-2009 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா.*

திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லிய விளக்கத்தை நான் ஏற்றுக்கொண்டு, தாம்பரம் தொகுதியிலே நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரடியாக சில இடங்களைப்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றப் பேரவை TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்